இத்திட்டத்தைக் கொண்டுவந்தால், இன்னும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே அது கட்டாயமாக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நிறுவனங்களில் நாம் கட்டாயப்படுத்த முடியாது. இருந்தாலும் கூட, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தனியார் நிறுவனங்களிலும் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகமாக அளிக்கப்படவேண்டும் என்பதில், ஊக்குவிக்கப்படவேண்டும் என்பதற்காக அவர்களுக்கு நிரம்பப் பரிசுகளை அறிவித்திருக்கிறார்கள். அந்தப் பரிசுகளின் வாயிலாக - புரட்சித் தலைவி அவர்களின் பெயரால் அறிவிக்கப்பட்டிருக்கிற அந்தப் பரிசுகளைப் பெறுவதற்காக இன்றைக்கு பல்வேறு தனியார் நிறுவனங்கள் போட்டி போட்டு, உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் இதற்குத் தனியார் நிறுவனங்களுக்குப் பரிசுகள் கொடுக்கப்படுகின்றன.

முற்பகல் 11.05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 116, திரு. சி. சுவாமிநாதன், இருக்கையில் இல்லை.

வினா எண் 117, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

117—

கோவையில் பொருட்காட்சி அமைக்கும் திட்டம்

*** 40692**—*திரு. கே. செல்வராஜ்:*

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவையில் அரசு சார்பில் நிரந்தர பொருட்காட்சி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் தென்னிந்தியாவிலேயே தொழில் துறையில்

மான்செஸ்டர் என்று புகழ் பெற்ற நகரம். அங்கே நிரந்தர பொருட்காட்சி அமைக்கும் திட்டம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். வருடத்திற்கு ஒரு முறை கோவை மத்திய சிறை மைதானத்திலே பொருட்காட்சி நடத்தப்படுகிறது. அந்த இடத்திலேயே ஒரு இரண்டு ஏக்கர் நிலத்தில் நிரந்தரமாக ஒரு பொருட்சாட்சி அமைத்தால், தொழில் துறையில் சிறந்த முறையில் விளங்குகின்ற கோவையில் கல்லூரி மாணவர்களும் பள்ளி மாணவர்களும் அந்த பொருட்காட்சியின் மூலம் தொழில் பழகுகின்ற வாய்ப்பு ஏற்படும். பெங்களூரிலே இருக்கின்ற தொழில் பொருட்காட்சியைப் போல கோவையிலும் ஒரு பொருட்காட்சியை அமைப்பதற்கு வருகின்ற நிதியாண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே, வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லை என சொல்லத்தக்க அளவுக்கு, தமிழகத்திலேதான், அதுவும் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலேதான், அரசாங்கத்தின் சார்பிலே நேரடியாக பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. நிரந்தர பொருட்காட்சி அமைக்கப்பட வேண்டுமானால், அதற்கு நிரந்தரமான இடம் வேண்டும். இன்றைக்கு கோவையிலே நடத்தப்படுகின்ற பொருட்காட்சிகூட மத்திய சிறைச்சாலைக்குச் சொந்தமான இடத்திலேதான் நடத்தப்படுகிறது. அந்த இடத்திற்குக்கூட வாடகை கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, நிரந்தரமாக பொருட்காட்சி அமைக்கின்ற எண்ணம் அரசின் பரிசீலனையில் இல்லை. அப்படி அதை அமைத்தால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. நீங்கள் நினைக்கின்ற பலனும் கிடைக்காது; நஷ்டம்தான் வரும். ஆகவே, பொருட்காட்சி அமைக்கின்ற எண்ணம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறைக்கு சம்பந்தப்பட்ட இடங்கள் கோவை மாநகர்ப் பகுதியில் நிறைய இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருவாய்த் துறையை அணுகி அந்த இடங்களில் ஒன்றைப் பெற்று பொருட்காட்சி அமைக்கலாம். கோவை மாநகரில் நிரந்தர பொருட்காட்சி மூலம் பயன் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது தவறான கருத்து என்று நான் எனது மேலான கருத்தாகத் தெரிவித்துக் கொள்கிறேன். கோவை நகரைப் பொறுத்தமட்டில் 40 லட்சம் மக்கள் உள்ளனர். இந்தியாவிலேயே கோவை மாநகர் மக்கள்தான் வேகமாக சுறுசுறுப்பாக தொழிலில்

முனைந்து ஈடுபட்டு தமிழகத்திற்கு அதிக நிதியை பெற்றுக் கொடுக்கின்ற நல்லவர்கள் வாழ்கின்ற மாநகர். அங்கே நிரந்தர பொருட்காட்சி அமைக்க....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆகவேதான் நீங்கள் எந்தப் பொருட்காட்சியையும் பார்க்க வரமாட்டேன் என்கிறீர்கள் என்பது அமைச்சரின் கருத்து.

திரு. கே. செல்வராஜ்: வருவாய் துறை அமைச்சர் அவர்களை அணுகி கோவை மாநகர்ப் பகுதியில் அந்த இடத்தைப் பெற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலித்து, நிரந்தரமாக ஒரு பொருட்காட்சியை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் அமைத்துக் கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு எந்த மாநிலத்திலும் நிரந்தரப் பொருட்காட்சி இல்லை. நம்முடைய சென்னையில்கூட சுற்றுலாத் துறையின் சார்பில் நடத்தப்படுகின்ற பொருட்காட்சிகூட 90 நாட்கள் நடத்தப்படுகின்றது. புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் 3 பொருட்காட்சிகள்தான் நடத்தப்பட்டன. இன்றைக்கு பெரிய பொருட்காட்சிகள் 7 மாவட்டத் தலைநகரங்களில் நடத்தப்படுகின்றன. 2 சிறிய பொருட்காட்சிகள் இந்த ஆண்டு நடத்தப்படுகின்றன. ஆண்டுதோறும் மாவட்டத் தலைநகரங்களில் பொருட்காட்சிகள் நடத்தப்படுவது கூடிக்கொண்டே இருக்கின்றன. ஆகவே, நிரந்தரப் பொருட்காட்சி நடத்த வேண்டிய நிலையில் இந்த அரசு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. எஸ். துரைமுருகன்.

திரு. கே. எஸ். துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை பெரிய மாவட்டம். அங்கே திருப்பூர், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, மேட்டுப்பாளையம் போன்ற முக்கிய நகரங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதிகளிலே மினி பொருட்காட்சி என்று சொல்லக்கூடிய சிறிய அளவிலான பொருட்காட்சி அமைத்தால் அப்பகுதி மக்கள் பெருமளவில் பயனடைவார்கள். ஆகவே, அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய அளவிலான பொருட்காட்சிகள் லாபத்தை தருகின்றன. சிறிய அளவிலான பொருட்காட்சிகள் சென்ற ஆண்டு தர்மபுரியிலும்

காரைக்குடியிலும் நடத்தப்பட்டன. அவை எதிர்பார்த்த அளவுக்கு பயன் தரவில்லை. ஆகவே, சிறிய பொருட்காட்சிகள் நடத்துகின்ற எண்ணத்தை அரசு செயல் படுத்த வேண்டுமானால் நஷ்டத்திற்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்படுகிறது. பொருட்காட்சிகள் நடத்தப்படுவதே அரசாங்கத்தினுடைய திட்டங்களையும் கொள்கைகளையும் மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்; அவற்றை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும், அறிந்துகொள்ள வேண்டும் என்கின்ற உணர்விலேதான் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. குறைந்த செலவிலே நிறைந்த பொழுதுபோக்கைத் தரவேண்டும், மக்கள் மகிழ்ச்சி அடைய வேண்டும் என்கின்ற உணர்விலேதான் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. கோவையைப் பொருத்தமட்டிலே பொழுதுபோக்கிற்கு ஒன்றும் இல்லை என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிற்கிணங்க அன்னை சந்தியா சிறுவர் உலகம் 25 ஏக்கரிலே ஒரு அதிசய உலகமாக அங்கே உருவாக இருக்கிறது. அது நிரந்தரப் பொழுதுபோக்கைத் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, சிறிய பொருட்காட்சிகள் நஷ்டத்தைத் தருவதால் அவற்றை நடத்துகின்ற எண்ணம் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்கை கோவிந்தராசு.

முற்பகல் 11-10

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் என்பது பணம் வளம் கொழிக்கும் மாவட்டம். அந்த மாவட்ட மக்களுக்கு அரசுத் துறை மூலமாக நிரந்தர பொருட்காட்சி இல்லையென்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். எங்களைப் போன்ற ** அங்கே தனியாக எங்களுடைய மாவட்டம் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களும் ** இருக்கிறீர்கள். உங்களுடைய மாவட்டமும் ** மாவட்டமாக இருக்கிறது. ஆகவேதான் இந்தமாதிரி சிறுசிறு பொருட்காட்சிகளைப் பார்க்க வரமாட்டீர்கள் என்று நானும் சொன்னேன்.

திரு. சிங்கை கோவிந்தராசு: ஆகவே தனியார் பெரிய ** இதுபோன்ற சிறிய பொருட்காட்சிகளை தொகுதிதோறும் நடத்துவதற்கு அமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கி உதவுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பொருட்காட்சிகளை நடத்துவதற்குத் தடையேதுமில்லை. ஆனால் அரசாங்கம் சில விதிகளை கட்டுப்பாடுகளை வைத்திருக்கிறது. திறமையான விளையாட்டுகள், சூதாட்டங்கள் போன்றவை நடத்தப்படக்கூடாது என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஆகவே, தொழில் வளர்ச்சி ரீதியான பொருட்காட்சிகளோ அல்லது அறிவு வளர்ச்சி ரீதியான பொருட்காட்சிகளோ நடத்த வேண்டுமென்று தனியார்கள் விரும்பினால் அரசாங்கம் அனுமதி கொடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 118, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

118—

பூதலூர் அரசு பெண்கள் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்

*** 35678—***திரு. ப. கலியபெருமாள்:*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவையாறு தொகுதி, பூதலூரில் உள்ள அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்குப் போதிய இடவசதி இன்மையால், பள்ளிக்கு இடம் வழங்கி கட்டிடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவையாறு தொகுதி, பூதலூரில் உள்ள அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கென சொந்தமாக 17 செண்ட் இடம்தான் உள்ளது. கூடுதல் நிலம் பெறுவது குறித்து இப்பள்ளியின் தலைமையாசிரியர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகம், கட்டிட மதிப்பீட்டில் 50 சதவீதம் தொகையை கட்ட முன்வருமானால் மீதமுள்ள 50 சதவீதம் பணத்தை அரசு நிதியிலிருந்து ஒதுக்கி கட்டடம் கட்டுவதற்கு நிலம் கிடைத்ததற்குப் பிறகு ஏற்பாடு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதியில் பூதலூரில் உள்ள அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு போதிய இடவசதியின்மையால் பள்ளிக்கூடம் கட்டுவதற்கு இடம் வழங்கி கட்டித்தர அரசு முன்வருமா என்று கேட்டுள்ளேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பள்ளியின் பெற்றோர்